TAM209B2

# சாப்பாட்டு ராமன்

**ஆதாரம்: Story weaver**




## சாப்பாட்டுராமன்


**Author:** Herminder Ohri
**Illustrator:** Herminder Ohri
**Translator:** Guruprasad Vijayarao



Community Story

நிலை I




ஒரு நாள், சுட்டு என்ற எலிக்கு மிகவும் பெரிய லட்டு கிடைத்தது.

லட்டுவை வீட்டுக்குக் கொண்டு சென்று தான் மட்டும் அதைத் திண்ண வேண்டும் என்று நினைத்தது.



சுட்டு லட்டுவை பின்னால் தள்ளியது.

லட்டு நகரவே இல்லை.




சுட்டு லட்டுவை முன்னால் தள்ளியது.

லட்டு நகரவே இல்லை.



சுட்டு லட்டுவை வலது பக்கம் வந்து தள்ளியது.

லட்டு நகரவே இல்லை.



சுட்டு குடுகுடு என ஓடி இடது பக்கம் வந்தது.

இடது பக்கம் இருந்தும் லட்டுவை தள்ள முடியவில்லை.





சுட்டு யோசித்தது...

சுட்டுவுக்கு ஒரு யோசனை வந்தது.



சுட்டு அதன் வீட்டிற்கு ஓடிச்சென்று ஒரு கயிறு கொண்டு வந்தது.

ஆனால் அது சிறியதாக இருந்தது.




திரும்பவும் ஓடிச்சென்று பெரிய கயிறு ஒன்றை எடுத்து வந்தது.

லட்டுவை கயிறால் கட்டி இழுத்தது

ஆனாலும் லட்டு நகரவே இல்லை.



சுட்டு அங்கேயே உட்கார்ந்து லட்டுவை தின்ண ஆரம்பித்தது.



லட்டுவைச் சாப்பிட்டு சாப்பிட்டு சுட்டு குண்டானது. லட்டு சின்னதாகிப் போனது.

இப்போது லட்டுவைத் தள்ளியது. லட்டு உருண்டு சுட்டுவின் வீட்டுக்குள் சென்றது.




சுட்டு குண்டானதால் அதன் வீட்டுக்குள் போக முடியவில்லை.



சுட்டுவுக்கு பயங்கர வயிற்று வலி. "நான் மட்டுமே சாப்பிட்டு இருக்கக் கூடாது. நண்பர்களோடு பகிர்ந்து சாப்பிட்டு இருக்க வேண்டும்" என்று சொல்லி வருந்தியது.

**வகுப்பறை உரையாடல்கள்:**

**கதை கூறுவதற்கு முன்:**

1. எப்போதாவது நீங்கள் அளவுக்கு அதிகமாகச் சாப்பிட்டு இருக்கிறீர்களா? அப்போது உங்களுக்கு எப்படி இருக்கும்?
   - வயிறு பெரியதாக இருக்கும், வயிறு வலிக்கும், சட்டை பொத்தானைக் கழற்றி விடுவோம், தூக்கம் வரும் …
2. திண்பண்டம் அதிகமாக இருந்தால் என்ன செய்யலாம்?
   - குறைவாகச் சாப்பிட வேண்டும், மீதியை எடுத்து வைத்து அப்புறமாகச் சாப்பிடலாம், வீட்டில் உள்ள மற்றவர்களுக்குக் கொடுக்கலாம், நண்பர்களுக்குக் கொடுக்கலாம், தெருவில் உள்ள மற்ற குழந்தைகளுக்குக் கொடுக்கலாம் …
3. சரி. இதுபோலவே, ஒரு எலியாருக்கு என்ன ஆகிறது என்று ஒரு கதையைப் படிக்கப் போகிறோம். கதையின் பெயர் ‘சாப்பாட்டு ராமன்’. இந்தக் கதை எதைப்பற்றியதாக இருக்கும்?
   - எலி நிறைய சாப்பிட்டு விட்டது. அதற்கு வயிற்று வலி.
   - ஒரு எலி எப்போதும் சாப்பிட்டுக் கொண்டே இருக்கும். யாருக்கும் தராது.
   - ஒரு எலி நிறைய சாப்பாட்டைச் சேர்த்து வைக்கும். மழை நாளில் சாப்பிட்டுக் கொண்டே இருக்கும்…

**கதை கூறும் போது:**

ஆசிரியர், ஒவ்வொரு படஅட்டையாகக் காட்டி மாணவர்களைக் கதையின் ஓட்டத்தை ஊகிக்கச் செய்கிறார். பின் கதைப்புத்தகத்தைப் படித்துக் காட்டுகிறார். இடையிடையே மாணவர்களின் சிந்தனையைத் தூண்டும் வகையில் சில கேள்விகளைக் கேட்கிறார்.

- லட்டுவை எலியால் தள்ள முடியவில்லை. அது என்ன செய்திருக்கும்?
- லட்டுவை இழுக்க முடியவில்லை என்றதும், எலி ஏன் சாப்பிட ஆரம்பித்தது?
- எலி லட்டுவை சாப்பிட்டுக் கொண்டே இருக்கிறது. இப்பொது என்ன ஆகும்?

**கதை கூறிய பின்:**

1. குழுச்செயல்பாடு: ஆசிரியர் ஒவ்வொரு குழுவிற்கும் இந்த இரண்டு படங்களையும் கொடுத்து, அவர்களின் கருத்துக்களைக் குழுவில் விவாதித்து எழுதி வர வேண்டும்.




2. இந்த எலியைப் போல உங்கள் வாழ்க்கையில் நடந்த நகைச்சுவையான நிகழ்வுகளில் ஏதேனும் ஒன்றைப் பற்றி படம் வரைந்து 5 வரிகள் எழுதி வரவும்.